2. அறிக்கை அளித்தல்

பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சின்னசாமி, பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவர்.*

***திரு. ஆர். சின்னசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை, தமிழகத்தினுடைய விடிவெள்ளியாகவும் இந்தியாவின் வழிகாட்டியாகவும் இருக்கக்கூடிய மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி, 2012-2013 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் மூன்றாவது அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன்.*

முற்பகல் 11-20

3. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர் படைச் சட்டமுன்வடிவு, 2013

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர் படைச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.*

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர் படைச் சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. அ. சக்கரபாணி, என்ன சொல்கிறீர்கள்? (குறுக்கீடு) எதிர்ப்புத் தெரிவிக்கிறீர்கள், அவ்வளவுதானே? உங்கள் கருத்து பதிவு செய்யப்படுகிறது. உட்காருங்கள். (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.*

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் கருத்து பதிவு செய்யப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

4. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது கொடுக்கப்பட்ட திருத்தங்கள் இன்று முன்மொழியப் பெற்று, வழிமொழியப் பெற வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்கள்.

திரு. இரா. அண்ணாதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பின்வரும் திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"1. மதுரை, தெற்குவாசல் பாலத்தில் நிலவும் கடும் போக்குவரத்து நெரிசலைப் போக்க அடுக்குமாடி பாலம் கட்டுவது குறித்தும்;

2. மதுரை, வைகை ஆற்றில் கழிவுநீரிலுள்ள ஆகாயத் தாமரையை அகற்றி சுற்றுச்சூழலை பாதுகாப்பது குறித்தும்;

3. மதுரை மாநகரில் நிலவும் குடிநீர் தட்டுப்பாட்டை போக்குவது குறித்தும்;